யா/ ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை.
# J/ Hartley College, Point Pedro.

முதலாம் தவணைப் பரீட்சை – 2020 – தரம் 7
## First Term Examination – 2020 – Grade 7

கிறிஸ்தவம் I, II
Christianity I, II

15 | T | I, II

இரண்டு மணித்தியாலம்
Two Hours

சுட்டெண்
Index No

## கிறிஸ்தவம்

### பகுதி I

**மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. இறைதந்தை பூமியில் மனிதனை உருவாக்கியது
    1. இயற்கையால் 2. கல்லால் 3. மண்ணால் 4. நீரால்

02. இறைவனின் அரசை சார்ந்த பிள்ளைகளிடம் இறைவன் எதிர்பார்ப்பது
    1. இறைவனோடு பேசுவதை 2. இறைவனோடு தொடர்பு கொள்வதை
    3. நன்றாகப் படிப்பதை 4. தினமும் பெற்றோருக்கு கீழ்ப்படிவதை

03. சிறுவர் நன்நடத்தை காரியாலயம் சிறுவர் பெண்கள் அமைச்சு என்பவற்றின் பணி
    1. சிறுவர்களுக்கு கல்வியறிவூட்டல் 2. சிறுவரின் உரிமைகளை பாதுகாத்தல்
    3. சிறுவரை நோய்களிலிருந்து பாதுகாத்தல் 4.சுற்றாடலை தூய்மையாக வைத்திருத்தல்

04. ஏதேன் தோட்டத்தை பாதுகாப்பதற்காக மனிதனை அங்கு குடியிருக்க செய்தார். ஏதேன் தோட்டத்தை பாதுகாத்தல் என்றால்
    1. முழுப்படைப்பையும் பாதுகாத்தல் 2. தோட்டங்களை பாதுகாத்தல்
    3. ஏதேன் தோட்டத்தை ஆளுதல் 4. அடுத்த சந்ததிக்கு ஒப்படைத்தல்

05. நோவானின் காலத்தில் மனித சமூக சீர் கேட்டினால் ஏற்பட்டது
    1. துன்பங்கள் 2. நெருப்பு மழை 3. நோய்கள் 4. வெள்ளப்பெருக்கு

06. வளி மாசடைவது
    1. அசுத்தமான தண்ணீரை ஆற்று நீருடன் கலத்தல்
    2. தொழிற்சாலை புகை வளியுடன் கலத்தல்
    3. மரங்களை வெட்டுதல்
    4. பொலித்தீன் பிளாஸ்ரிக் போன்றவற்றை சூழலில் போடுதல்

07. “ நீர்த்துளிகளை அவர் ஆவியாக இழுக்கின்றார்: அவற்றை மழையாக வடித்துக் கொடுக்கிறார்” என கூறப்பட்ட திருவிவிலியப்பகுதி
    1. திருப்பாடல் 2. தொடக்கநூல் 3. மத்தேயு 4. யோபு

08. மழை பெய்வது புதிய குழந்தையின் பிறப்பு என்பன இறைபடைப்பின் …………
    1. சுழற்சி வட்டம் 2. தொடர்ச்சியாக நிகழ்வது
    3. இயல்பான வட்டம் 4. இயற்கை நியதி

09. ஆண்டவருக்கு அஞ்சுவது
    1. ஞானத்தின் ஊற்று 2. இறைவனுக்கு பயந்து வாழ்வது
    3. நல்லதை தெரிவு செய்வது 4. மேற்கூறிய எல்லாம்

10. இறைவன் தமது மாறாத அன்பினால் எமக்கு தயவும் இரக்கவும் காட்டுகிறார் நாமும்

1. ஒடுக்கப்பட்டடோருக்கு நீதி கிடைக்கச் செய்ய வேண்டும்
2. தவறு செய்தோரை மன்னிக்க வேண்டும்
3. ஏழ்மையானோருக்கு இரக்கம் காட்ட வேண்டும்
4. மேற்கூறிய எல்லாம்

11. குடும்பத்தை உருவாக்கியோர்

1. பெற்றோர் 2. இறைவன் 3. பிள்ளைகள் 4. குருவானவர்

❖ 12- 14 வினாக்களுக்கு பின்வரும் கூற்றுக்களிலிருந்து விடை தருக.

A- பாலை நிலத்தில் ஒரு குரல் முழங்குகிறது.

B- எனக்கு பின் ஒருவர் வருகிறார் அவர் என்னை விட வலிமை மிக்கவர்

C- விரியன் பாம்புக் குட்டிகளே

D- மனம் மாறுங்கள் ஏனெனின் விண்ணரசு நெருங்கி வந்து விட்டது

12. இயேசு பற்றிய திருமுழுக்கு யோவானின் கூற்று

1. C 2. A 3. B 4. D

13. பரிசேயரை திருமுழுக்கு யோவான் இவ்வாறு அழைக்கிறார்

1. C 2. B 3. D 4. C

14. திருமுழுக்கு யோவான் பற்றி பழைய ஏற்பாட்டில் இறைவாக்கினர் எசாயாவின் கூற்று

1. B 2. A 3. D 4. C

15. இயேசு பாலை நிலத்தில் அலகையால் சோதிக்கப்பட்டது

1. 40 நாட்கள் 2. 30 நாட்கள் 3. 25 நாட்கள் 4. 50 நாட்கள்

16. இயேசுவை மக்கள் அரசனாக்க முயற்சிக்க புதுமை

1. தண்ணீரை இரசமாக்கிய போது 2. இலாசரை உயிர்ப்பித்த போது
3. பேய்கள் ஓட்டிய போது 4. ஐயாயிரம் பேருக்கு உணவளித்த போது

17. இயேசுவின் வல்லமையைக் காட்டுமாறு வலியுறுத்திய சோதனை

1. கற்களை அப்பமாக மாற்றும் படி கூறியமை
2. சிலுவையிலியிருந்து இறங்கி வரும்படி கூறியமை
3. உலக அரசுகளை காட்டி நீர் என்னை வணங்கினால் இவையனைத்தும் உம்முடையதாகும் என கூறியமை
4. எருசலேம் கோவிலின் உயர்ந்த பகுதியிருந்து கீழே குதியும் என கூறியமை

18. இயேசு தமது போதனைக்கு தெரிவு செய்த இடம் அல்லாதது

1. மலையுச்சி 2. கடற்கரையோரம் 3. எருசலேம் ஆலயம் 4.. சமவெளி

19. பிறர் எம்மில் கரிசனை காட்டுவது போல் நாமும் பிறரில் கரிசனை காட்ட வேண்டும் என கூறுவது

1. பத்துக்கட்டளை 2. திருச்சபையின் கட்டளை
3. பொன் விதி 4. திருப்பாடல்

20. உப்பு உணவை சுவையூட்டவது போல நாமும்

1. தீயசெயல்கள் பாவங்களை அகற்றிட செயற்பட வேண்டும்
2. துன்பத்தில் வேதனையில் பாவத்தில் வாழ்பவர்களுக்கு புதுவாழ்வும் ஆறுதலும் பெற செயற்பட வேண்டும்
3. இறையரசின் பெறுமதியை நிலைநாட்டி வாழவேண்டும்
4. கரைந்து செயற்பட வேண்டும்.

$(\mathbf{20 \times 2 = 40})$

## பகுதி II

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக**

01. 1. கடவுள் தான் உருவாக்கிய மனிதனை எந்த தோட்டத்தில் வைத்தார்?
    2. இன்று சமுதாயத்தில் பிள்ளைகளுக்கு ஏற்படும் துன்பங்கள் மூன்று தருக?
    3. கடவுள் மனிதனுக்கு கொடுத்த பொறுப்புக்கள் எவை?

$(3 + 3 + 6 = 12)$

02. 1. எம்மை தீமையிலிருந்து விலக்கி நல்வழி நடத்துவது எது?
    2. குடும்பமாகவும் சமுதாயமாகவும் நாம் ஒன்றாய் வாழும் போது கிடைக்கும் விசேட பெறுமதிகள் மூன்று தருக?
    3. தொடர் இறை செயற்பாட்டை மேற்கொள்ள நீர் எடுக்கும் ஐந்து செயற்பாடுகள் தருக?

$(3 + 3 + 6 = 12)$

03. 1. திருமுழுக்கு யோவானின் பெற்றோர் யார்?
    2. உமக்கு சோதனை ஏற்படும் போது நீர் எவ்வாறு நடந்து கொள்வீர்? மூன்று முறைகள் தருக?
    3. திருமுழுக்கு யோவானின் தூதுரைப்பணிக்கு நன்றி கூறி ஒரு செபம் எழுதுக?

$(3 + 3 + 6 = 12)$

04. 1. இயேசுவின மலைப்பொழிவுப் போதனை எந்த நற்செய்தி எந்த அதிகாரத்தில் உள்ளது?
    2. இயேசு தனது போதனைக்கும் கற்பித்தலுக்கும் பயன்படுத்திய எளிய இயற்கை உதாரணங்கள் மூன்று தருக?
    3. உப்பு எவற்றிற்கு பயன்படுகிறது ஐந்து உதாரணம் தருக?

$(3 + 3 + 6 = 12)$

05. பின்வருவனவற்றில் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
    1. உன்னத படைப்பான மனிதன்
    2. வாழ்வுக்கு வழிகாட்டும் இறைவார்த்தை
    3. இயேசுவின் குழந்தைப் பருவம்
    4. சிலுவையில் இயேசுவின் தியாகப் பலி

$(\mathbf{6 + 6 = 12})$